**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 168/2024**
**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. சுபேர் அகமது | Caste | : | |
| Father's Name | : | திரு. சேக் அப்துல்லா | Calling | : | கோழிக்கடை |
| Village | : | பேகம்பூர் | Religion | : | முஸ்லீம் |
| District | : | திண்டுக்கல் | Age | : | 27 |
| | | | Dated | : | 11.02.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1 முதல் 5 வரையிலான எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 4), **திரு. சுபேர் அகமது** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கோழிக்கடை வைத்து வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. இந்த வழக்கு விபரம் எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

கடந்த 06.11.2021ம் தேதி பகல் 12.45 மணிக்கு பேகம்பூர், ஜமால் தெருவில் உள்ள த.மு.மு.க. கட்சி அலுவலகம் அருகே நான் சொந்த வேலையாக இருந்தபோது, எங்கள் தெருவில் இருக்கும் சாதிக் பாட்ஷா, அவரது மகன் முகமது தாஹா மற்றும் ரபிக் ராஜா அங்கு வந்து, அங்கிருந்த த.மு.மு.க. கட்சியை சேர்ந்த 1-ம் எதிரி ஜாபர் சாதிக் மற்றும் 2-ம் எதிரி தமீம் அன்சாரி ஆகியோரிடம் தன் மகனை அடித்தது சம்மந்தமாக கேட்டபோது, அதற்கு அவர்கள் அவரது மகன் ஒரு பெண்ணின் வாழ்க்கையை கெடுத்துவிட்டதாகச் சொல்லி, அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, இவர்களை விடக்கூடாது போட்டுத் தள்ளுங்கடா என்று சொல்லி, அருகில் இருந்த 3, 4, 5 எதிரிகளோடு சேர்ந்து ஜாபர் சாதிக் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து, இத்தோடு செத்து தொலைந்து போங்கடா என்று சொல்லி சாதிக் பாட்ஷாவை வெட்டியதாகவும், அவரை தடுத்தபோது, அரவது வலது கை விரல்களில் வெட்டுப்பட்டு பலத்த இரத்த காயம் ஏற்பட்டதாகவும், மீண்டும் 1-ம் எதிரி அதே கத்தியால் அவர் தலையில் ஓங்கி வெட்டி காயத்தை ஏற்படுத்தியதாகவும், அங்கிருந்த 2 மற்றும் 3-ம் எதிரிகள் அருகில் கிடந்த கட்டையை எடுத்து முகமது தாஹாவைப் பார்த்து செத்து தொலைந்து போங்கடா என்று சொல்லி கட்டையால் உடம்பிலும் தலையிலும் மாறி மாறி அடித்து இரத்தக் காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அப்பொழுது நானும் மற்றும் சிலரும் விலக்க போனபோது, அவர்கள் கையில் வைத்திருந்த கத்தியையும், கட்டையையும் காட்டி இனிமேல் அந்த பெண்ணிற்கு தொந்தரவு கொடுத்தாலும், தங்களை பிடிக்க வந்தாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் செய்யவோ நானும், அக்கம் பக்கம் இருந்தவர்களும் உயிருக்கு பயந்து சிதறி ஓடினோம் என்றும், அந்த

கலவரத்தினால் அந்த இடத்தில் போக்குவரத்து ஸ்தம்பித்து என்றும், எதிரிகள் கட்டைகளை அந்த இடத்தில் போட்டுவிட்டு, கத்தியோடு தப்பி சென்றுவிட்டார்கள் என்றும், காயம்பட்ட மூவரையும் நாங்கள் ஒரு ஆட்டோவில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளோடு சமாதானமாகிவிட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 11.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.11 18:23:34 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 168/2024**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஆசிக் இஸ்மாயில்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சேக் அப்துல்லா** | **Calling** | : | **கோழிக்கடை** |
| **Village** | : | **பேகம்பூர்** | **Religion** | : | **முஸ்லீம்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **23** |
| | | | **Dated** | : | **11.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1 முதல் 5 வரையிலான எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 5), **திரு. ஆசிக் இஸ்மாயில்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கோழிக்கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. இந்த வழக்கு விபரம் எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

கடந்த 06.11.2021ம் தேதி பகல் 12.45 மணிக்கு பேகம்பூர், ஜமால் தெருவில் உள்ள த.மு.மு.க. கட்சி அலுவலகம் அருகே நான் சொந்த வேலையாக இருந்தபோது, எங்கள் தெருவில் இருக்கும் சாதிக் பாட்ஷா, அவரது மகன் முகமது தாஹா மற்றும் ரபிக் ராஜா அங்கு வந்து, அங்கிருந்த த.மு.மு.க. கட்சியை சேர்ந்த 1-ம் எதிரி ஜாபர் சாதிக் மற்றும் 2-ம் எதிரி தமீம் அன்சாரி ஆகியோரிடம் தன் மகனை அடித்தது சம்மந்தமாக கேட்டபோது, அதற்கு அவர்கள் அவரது மகன் ஒரு பெண்ணின் வாழ்க்கையை கெடுத்துவிட்டதாகச் சொல்லி, அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, இவர்களை விடக்கூடாது போட்டுத் தள்ளுங்கடா என்று சொல்லி, அருகில் இருந்த 3, 4, 5 எதிரிகளோடு சேர்ந்து ஜாபர் சாதிக் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து, இத்தோடு செத்து தொலைந்து போங்கடா என்று சொல்லி சாதிக் பாட்ஷாவை வெட்டியதாகவும், அவரை தடுத்தபோது, அரவது வலது கை விரல்களில் வெட்டுப்பட்டு பலத்த இரத்த காயம் ஏற்பட்டதாகவும், மீண்டும் 1-ம் எதிரி அதே கத்தியால் அவர் தலையில் ஓங்கி வெட்டி காயத்தை ஏற்படுத்தியதாகவும், அங்கிருந்த 2 மற்றும் 3-ம் எதிரிகள் அருகில் கிடந்த கட்டையை எடுத்து முகமது தாஹாவைப் பார்த்து செத்து தொலைந்து போங்கடா என்று சொல்லி கட்டையால் உடம்பிலும் தலையிலும் மாறி மாறி அடித்து இரத்தக் காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அப்பொழுது நானும் மற்றும் சிலரும் விலக்க போனபோது, அவர்கள் கையில் வைத்திருந்த கத்தியையும், கட்டையையும் காட்டி இனிமேல் அந்த பெண்ணிற்கு தொந்தரவு கொடுத்தாலும், தங்களை பிடிக்க வந்தாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் செய்யவோ நானும், அக்கம் பக்கம் இருந்தவர்களும் உயிருக்கு பயந்து சிதறி ஓடினோம் என்றும், அந்த

கலவரத்தினால் அந்த இடத்தில் போக்குவரத்து ஸ்தம்பித்து என்றும், எதிரிகள் கட்டைகளை அந்த இடத்தில் போட்டுவிட்டு, கத்தியோடு தப்பி சென்றுவிட்டார்கள் என்றும், காயம்பட்ட மூவரையும் நாங்கள் ஒரு ஆட்டோவில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளோடு சமாதானமாகிவிட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 11.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.02.11 18:23:41 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**